

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை யொட்டி பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் உள்ள தொழுநோயாளிகளுக்கு அறுசுவை உணவு மற்றும் உடைகளை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளரும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஒன்றியச் செயலாளர்கள் வி.எஸ்.ஆராமுதன், சந்தானம், ஒன்றிய குழுத்தலைவர் உதயா கருணாகரன் உள்ளிட்டோர் உள்ளனர்.

### சோமாலியாவில் பயங்கரவாதிகள் தாக்குதலில்

# 54 உகாண்டா ராணுவ வீரர்கள் பலி!

உகாண்டா, ஜுன் 5 -

சோமாலியாவில் அல்ஷபாப் பயங்கரவாத அமைப்பினர் அரசுக்கு எதிராக அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள். அவர்களை ஒடுக்க ராணுவம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேலும் உகாண்டா நாட்டை சேர்ந்த அமைதி படையும் சோமாலியாவில் தீவிர வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்நிலையில் சோமாலியா தலைநகர் மொகடிஷுவில் இருந்து தென்மேற்கே 130 கி.மீ. தொலைவில் உள்ள புலமாரரில் உள்ள பாதுகாப்பு படை தளத்தை குறி வைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து ராணுவத்தினரும் எதிர் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 54 உகாண்டா வீரர்கள் பலியானார்கள்.

இது தொடர்பாக உகாண்டா அதிபர் யோவேரி முசெவேனி கூறும்போது, சோமாலியாவில் உள்ள ராணுவ தளத்தில் அல்ஷபாப் தீவிர வாதிகள் நடத்திய தாக்குதலில் 54 உகாண்டா அமைதிப்படை வீரர்கள் உயிரிழந்தனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு சாந்தோமில் உள்ள முதியோர் மற்றும் குழந்தைகள் நல காப்பகத்தில் சுற்றுலா துறை அமைச்சர்.க. ராமச்சந்திரன், அறுசுவை உணவு வழங்கினார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழாவையொட்டி

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் 30 ஆதரவற்றோர் இல்லங்களில் உணவு வழங்கல்!

## பரனூரில் அரசு மறுவாழ்வு இல்லத்தில் தொழுநோயாளிகளுக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் உணவு வழங்கினார்!

செங்கல்பட்டு,மே.5-

தமிழகத்திற்கும் கழகத்திற்கும் கவசமாய் திகழ்ந்து மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவையொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் 30 ஆதரவற்றோர் இல்லங்களில் அமைச்சர் தா. மோ.அன்பரசன் உணவு வழங்கினார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கீழ்கண்ட ஆதரவற்றோர் முதியோர் சிறுவர் இல்லங்களில் உள்ள ஆதரவற்றோர், முதியோர், சிறுவர்களுக்கும், மனவளர்ச்சி குன்றிய இல்லங்களில் உள்ள மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு, மாற்றுத்திறனாளிகளுக்கும், பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் உள்ள தொழுநோயாளிகளுக்கும் அறுசுவை மதிய உணவு வழங்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் படப்பை கிருபா இல்லம், கெருகம்பாக்கம் பிரேமவாசம் ஆதரவற்றோர் இல்லம், பரணிபுத்தூர் ஆலயம் சிறுவர் இல்லம், அய்யப்பந்தாங்கல் லிட்டில் டிராப்ஸ் ஆதரவற்றோர் இல்லம், பொழிச்சலூர் பாபா குருகுலம், திருப்பெரும்புதூர் விதை ஆதரவற்றோர் குழந்தைகள் காப்பகம், வி.பி.ஆர் சத்திரம், எறையூர் நியூலைப் ஆதரவற்றோர் முதியோர், வெங்காடு ஆதரவற்ற குழந்தைகள் நம்பிக்கை இல்லம்,

செங்கல்பட்டு மாவட்டத்தில் பரனூரில் அரசு மறுவாழ்வு இல்லம், செங்கல்பட்டில் மனவளர்ச்சி குன்றியோர் மகிமை இல்லம், காட்டாங்குளத்தூரில் சிவானந்த குருகுலம், வண்டலூர் வில்லியம்ஸ் ஊனமுற்றோர் பள்ளி, ஊரப்பாக்கம் யூத்கிறிஸ்டியன் சிறுவர் இல்லம், இந்தியன் கிறிஸ்டியன் மிஷன் சிறுவர் இல்லம், திருக்கழுக்குன்றம் சுப்பையா மடம் ஆதரவற்றோர் இல்லம், தாம்பரம் குட்லக் சென்டர் ஆதரவற்றோர் சிறுவர் இல்லம், சேலையூர் ஆதரவற்றோர் இல்லம்,

பெருங்களத்தூர் சாரதா சக்திபீடம் ஆதரவற்றோர் இல்லம் மற்றும் பவுசியதீபம் மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி, பீர்க்கன்கரணை ஆதரவற்றோர் முதியோர் இல்லம், செம்பாக்கம் ராஜகீழ்ப்பாக்கம் அன்னை கருணை இல்லம், சிட்லப்பாக்கம் பாபுஜி இல்லம், மாடம்பாக்கம் ரீச்ஆதரவற்றோர் கருணை இல்லம், பனங்காட்டுப்பாக்கம் அன்பகம் மனநலம் குன்றியோர் இல்லம், முடிச்சூர் அட்சயம் இல்லம் மற்றும் ஆதரவு இல்லம், மறைமலைநகரில் மாரநாதா ஆதரவற்றோர் பள்ளி, கோகுலபுரம் உதவும் உள்ளங்கள் முதியோர் இல்லம், வல்லாஞ்சேரி இன்பார்ம் மனவளர்ச்சி குன்றியோர் இல்லம், மாமல்லபுரம் வெண்பா முதியோர் இல்லம் ஆகிய ஆதரவற்றோர் இல்லங்களில் மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சியை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து மிகவும் எழுச்சியுடன் நடைபெற்றது.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்குகிறார்!

# திரு.வி.க நகர் வடக்குப் பகுதி வட்டக்கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் செ. தமிழ்வேந்தன் வேண்டுகோள்!

சென்னை, ஜுன் 5-

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் வடக்கு பகுதி வட்ட உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் பி. கே.சேகர்பாபு ஆலோசனை வழங்குகிறார்.

இன்று (05.06.2023, திங்கட் கிழமை) பின்னி மில்சில் மாலை 5 மணிக்கு 71-வது வட்டம் வட்ட கழக செயலாளர் திருமதி.பரிமளா சுரேஷ்பாபு 71'அ'வட்டம் வட்ட கழக செயலாளர் மா.ருத்ரமூர்த்தி ஆகியோர் தலைமையிலும், 72வது வட்டம் மாலை 6 மணிக்கு வட்ட கழக செயலாளர் எம்.ஏ.டீக்கா 72 'அ' வட்டம் வட்ட கழக செயலாளர் எம்.இசட் அபோய் ஆகியோர் தலைமையிலும், 74 வது வட்டம் மாலை 7 மணிக்கு வட்ட கழக செயலாளர் எஸ்.புஷ்பராஜ் 74'அ' வட்டம் வட்ட கழக செயலாளர் ஜி.கிருஷ்ண குமார் ஆகியோர் தலைமையிலும் நடைபெறும்.

பொருள்:

சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெறும் தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா பொது கூட்டம் .

இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ப. தாயகம் கவி எம்.எல்.ஏ. ஆகியோரும் கலந்துகொள்கின்றனர். பொதுக்குழ உறுப்பினர்கள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் அனைத்து பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள் பகுதிக்குட்பட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் பாகமுகவர்கள் (BLA - 2) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பகுதி கழக செயலாளர் செ. தமிழ்வேந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார் .

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டம்!

# அம்பத்தூர் வடக்கில் - வட்டம் வாரியாக செயல்வீரர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஜுன் 5-

இந்து சமய அறநிலையத் துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைப்படி கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்தை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் வடக்குப் பகுதி சார்பில் வட்ட வாரியாக வட்ட நிர்வாகிகள் மற்றும் பாகமுகவர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது என பகுதிச் செயலாளர் ஜோசப் சாமுவேல் எம். எல்.ஏ. அறிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, இந்து சமய அறநிலையத்துறை, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி கலைஞர் நூற்றாண்டு விழாப் பொதுக் கூட்டத்தை முன்னிட்டு அம்பத்தூர் வடக்குப் பகுதிக்குட்பட்ட வட்ட வாரியாக வட்ட நிர்வாகிகள் மற்றும் பாகமுகவர்களின் ஆலோசனைக் கூட்டம் கீழ்கண்ட இடங்களில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக, பகுதி மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பல்வேறு அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகநிலை முகவர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வட்டம் வாரியாக கூட்டங்கள் நடைபெறும் விபரம் வருமாறு:-

05.06.2023 - வார்டு 81 - பென்சன் ஹால் ஒரகடம் ரோடு, வெங்கடாபுரம் - திங்கட்கிழமை, காலை 10.00 மணி

05.06.2023 - வார்டு 80 - மல்லிகா மஹால், புதூர் மெயின் ரோடு - திங்கட்கிழமை காலை 10.30 மணி.

05.06.2023 - வார்டு 86 - 86வது வட்டக் கழக அலுவலகம், அத்திப்பட்டு - திங்கட்கிழமை, மாலை 5.00 மணி.

05.06.2023 - வார்டு 79அ - மஹாலட்சுமி கல்யாண மண்டபம், ராம் நகர் - திங்கட்கிழமை, மாலை 6.00 மணி.

05.06.2023 - வார்டு 79 - மஹாலட்சுமி கல்யாண மண்டபம், ராம் நகர் - திங்கட்கிழமை, மாலை 6.30 மணி.

05.06.2023 - வார்டு 85 - டிரிப்பிள் டி மஹால், டி.ஐ.சைக்கிள் ரோடு - திங்கட்கிழமை, மாலை 7.00 மணி.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### அம்பத்தூர் தெற்கு பகுதியில்

# வட்டம் வாரியாக செயல் வீரர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால் அறிவிப்பு!

சென்னை, ஜுன் 5 -

அம்பத்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி. இராஜகோபால் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு ஆலோசனைப் படி, அம்பத்தூர் தெற்கு பகுதியில் உள்ள 87, 88, 89, 90, 93 ஆகிய வட்டங்களின் வட்டக்கழக நிர்வாகிகள் மற்றும் செயல் வீரர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம். கீழ்கண்ட இடங்களில் நடைபெறுகின்றது. இக்கூட்டத்தில் பகுதிச் செயலாளர் ஜோசப் சாமுவேல் எம். எல்.ஏ. மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்திற்கு பகுதி மற்றும் வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் பல்வேறு அணிகளின் மாவட்ட, பகுதி, வட்டக் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA 2 பாக நிலை முகவர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

90 வது வட்டம்: இன்று (5.06.23- திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு.

நகர் நலக் கழகம், திருவல்லீஸ்வரர் நகர்,

89 வது வட்டம்: 5.06.2023 காலை 10 மணி.

இடம் : கட்சி அலுவலகம், வட்ட வடிவ நகர். செ 101,

88 வது வட்டம்: 05.06.23 மாலை 6:00 மணிக்கு.

இடம்: அண்ணா அறிவு வளர்ச்சி மன்றம். வடக்கு மாட வீதி பாடி செ 50.

87 வது வட்டம்: 05.06.23 இரவு 7:00 மணி,

இடம்: 87வது வட்ட அலுவலகம், ராஜா தெரு பாடி செ 50

93 வதுவட்டம்: 05.06.23 இரவு 7.30 மணி

இடம்: மாமன்ற உறுப்பினர் அலுவலகம், பாடிக்குப்பம் செ 107

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### வட்டச் செயலாளர் கே.என்.தாமோதன் தலைமையில்

# வேளச்சேரி 176 அ வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## சு.சேகர் - எஸ்.பாஸ்கரன் - வே.ஆனந்தம் பங்கேற்பு!

சென்னை, ஜுன் 5 -

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி மேற்கு பகுதி 176 அ வட்ட கழகத்தின் சார்பில் விஜயநகர் முதல் பிரதான சாலை காலை 8 மணியளவில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினை வட்ட செயலாளர் கே.என். தாமோதரன் தலைமையில் பகுதி செயலாளர் அரிமா சு.சேகர், மாவட்ட பொருளாளரும்,178வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும்,176வது வார்டு உறுப்பினருமான வேளச்சேரி வே.ஆனந்தம் ஆகியோர் கலந்துகொண்டு கழக கொடியேற்றி 1,100நபர்களுக்கு அறுசுவை காலை உணவு வழங்கினர்.

இந்நிகழ்வில் வட்டத்திற்குட்பட்ட மாவட்ட கழக, பகுதிக் கழக, வட்ட கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிரணியினர், பாக முகவர்கள், செயற்குழு உறுப்பினர்கள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு! அம்பத்தூர் தெற்கு பகுதி

# 90வது வட்டச் செயல்வீரர்கள் கூட்டம் !

## வட்டச் செயலாளர் நா.நெப்போலியன் அறிக்கை !

சென்னை, ஜுன். 5

அம்பத்தூர் தெற்குப் பகுதி 90 வது வட்டச் செயலாளர் நா. நெப்போலியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் இந்து சமய அறநிலைத்துறை மற்றும் பெருநகர சென்னை வளர்ச்சி குழும அமைச்சருமான பி.கே. சேகர்பாபு ஆலோசனையின்படி இன்று (5.6.2023) மதியம் 3 மணிக்கு வட்டச் செயல்வீரர்கள் கூட்டம் திருவல்லீஸ்வரர் நகரில் உள்ள திருவல்லீஸ்வரர் நகர் நலக் கழகத்தில் அம்பத்தூர் தெற்குப் பகுதிச் செயலாளரும் மாமன்ற துணைத் தலைவருமான டி.எஸ்.பி. ராஜகோபால் முன்னிலையிலும், எனது (வட்டச் செயலாளர் நா.நெப்போலியன்) தலைமையிலும் நடைபெற உள்ளது.இந்நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. மண்டலக் குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் 90 - வது வட்டத்திற்குட்பட்ட பகுதிக்கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் .

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா

# கலைஞர் நகர் 137 ஆ வட்டத்தில் 1000 பேருக்கு உணவு வழங்கல்!

## வட்டச் செயலாளர் அ.கதிரேசன் தலைமையில்

சென்னை, ஜுன் 5 -

கலைஞர் நகர் தெற்குப் பகுதி 137ஆ -வட்டத்தில் 25 இடங்களில் கழகக் கொடி ஏற்றி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மேலும் பல்வேறு இடங்களில் 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வட்ட செயலாளர் அ.கதிரேசன் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் மக்கள் நல் வாழ்வுதுறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி கலைஞர் நகர் தெற்கு பகுதி 137 ஆ . வட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு, விழாவை முன்னிட்டு 137 ஆ. வட்டம் முழுவதும் 25 இடங்களில் கொடியேற்றி இனிப்பு நலத் திட்டம், குழந்தைகளுக்கு நோட்டு புத்தகம், பள்ளி கூட பை மற்றும் புகழேந்தி தெரு தொடர்ச்சியில் வட்டக் கழகச் செயலாளர் அ. கதிரேசன் ஏற்பாட்டில் 1000 பேருக்கு உணவு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பகுதி துணை செயலாளர் அஜந்தா எஸ்.ரவி, மாவட்டப் பிரதிநிதி என்.ரவி, வட்ட அவைத் தலைவர் என். சக்கரவர்த்தி, வட்ட கழக துணை செயலாளர் தி.ராஜேஸ்வரி, வட்ட பொருளாளர் ஆர். பழனி , பகுதி மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் என். நிஷா சையத், பகுதி பிரதிநிதிகள் என்.ஜெகதீசன், ப.தனசேகரன், ஜே. சதிஷ்குமார், ந.பாரி, மாவட்ட துணை அமைப்பாளர் என். எம்.முகம்மது ரியாஷ், எல். வாசு, என்.எம், சுந்தராஜன், பி.சங்கர், ஆர்.சேது, . கே.பி. குமார், ஆர். டில்லிபாபு, எ.ரெங்கநாதன், சென்ட்ரிங் ராஜா. என்.வேலாயுதம், பூச்சி வெங்கடேசன், கருப்பு கே.சங்கர், ஜே.ரகுநாதன், ஜி.ரகு, இ.பி. . சங்கர். .ஆ.குமார். என்.ரகுநாத், சிம்சன் பிரகாஷ்ரான், சத்தியா, எஸ்.நரசிம்மன், பங்கு செல்லும், தம்பா அன்பானந்தம் தெரு பிரபா, மணி, விஜயகுமார், குணசேகரன், ராமைய்யா, ஜோசப். வி.ஐ.பி.விஜய், கோகுல், அண்ணாவீதி பெரியசாமி. திலகா. முனியம்மாள், வெங்கட்டா, கங்கா . உஷா, ராஜேஷ்வரி, மாலு, உமா. மற்றும் இளைஞர் அணியினர், மகளிர் அணியினர் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழா முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி நிர்வாகி காக்களூர் த.சுகுமார் ஏற்பாட்டில் ஒன்றிய கழக செயலாளர் ஆர்.ஜெயசீலன் தலைமையில் காக்களூரில் நடைபெற்றது இதில் வெற்றி பெற்ற அணிகளுக்கு மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் கோப்பை மற்றும் காசோலைகளை வழங்கினார் உடன் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே. ஜெ.ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ்,பொன்.விமல், ஒன்றிய நகர செயலாளர்கள் ஜி.ஆர். திருமலை, ப.ச.கமலேஷ், நிர்வாகிகள் ஜெ.சுதாகர், எஸ்.என்.குமார், தரணி, கே.கே.சொக்கலிங்கம், சண்முகம், டி.கே.சீனிவாசன், டி.எம்.ராமசந்திரன், எஸ்.சௌந்தரராஜன், பிரபு, சங்கர், கமலக்கண்ணன், கிருஷ்ணன், அப்புன்ராஜ், மோகன்தாஸ், பாலசந்தர், மேகநாதன் தியாகு, வினோத், கார்த்திக், மணிகண்டன், திராவிட தேவன், ராஜேஷ், அருண்கீதன், மணிரத்தினம், சரவணன், விக்கி, சிவபிரகாசம், சதீஷ்குமார், கோவிந்தராஜ், ஜீவாநாதன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கே. இராமச்சந்திரன்**
**ஜுன் 5 (2021)**



**தனது இளமைக் காலத்திலேயே கழகத்தில் இணைந்து கழகப் பணியாற்றியவர்.**

**மன்னார்குடி நகரச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.**

**1989ல் மன்னார்குடி தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றி, மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**மாவட்ட அறங்காவலர் நியமனக்குழு துணைத் தலைவர் பொறுப்பு வகித்தவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**